
ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ விஷ்ணுசித்த குரவே நம:



லகு திருவாராதன க்ரமம்

[இரண்டாம் பதிப்பு]

பதிப்பாசிரியர்:

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

ஆசிரியர்: 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்'

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17

ஸ்ரீ. ரா, ஸ்ரீ. கி ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப
தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்படுகிறது.

டிரஸ்டிகள்:—

S கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M. A., B. L. அட்வகேட்,

S. ராமய்யங்கார், B SC., B.L., அட்வகேட்.

விலை ரூ. 4-00] [தபால் கூலி தனி

பஹுதாந்ய 31—3—1999 பங்குனி உத்திரம்

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.


ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவிஷ்ணுசித்த கு3ரவே நம:

ஸ்ரீவரத3 கு3ருப்4யோ நம:

ஸ்ரீமத்3 வரவர முநயே நம:



ஶ்லோக கு3ருபரம்பரை

அஸ்மத்3 தே3ஶிகமஸ்மதீ3ய பரமாசார்யாநஶேஷாந் கு3ருந்
ஸ்ரீமல்லக்ஷ்மண யோகி3 புங்க3வ மஹாபூர்ணௌ முநிம் யாமுநம்।
ராமம் பத்3மவிலோசநம் முநிவரம் நாத2ம் ஶட2த்3வேஷிணம்
ஸேநேஶம் ஶ்ரிய மிந்தி3ராஸஹசரம் நாராயணம் ஸம்ஶ்ரயே॥

வாக்ய கு3ருபரம்பரை

1. அஸ்மத்3 கு3ருப்4யோ நம:
2. அஸ்மத்பரமகு3ருப்4யோ நம:
3. அஸ்மத்ஸர்வகு3ருப்4யோ நம:
4. ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
5. ஸ்ரீபராங்குஶ தா3ஸாய நம:
6. ஸ்ரீமத்3 யாமுநமுநயே நம:
7. ஸ்ரீராம மிஶ்ராய நம:
8. ஸ்ரீபுண்ட3ரீகாக்ஷாய நம:
9. ஸ்ரீமந்நாத2முநயே நம:
10. ஸ்ரீமதே ஶட2கோபாய நம:
11. ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம:
12. ஶ்ரியை நம:
13. ஸ்ரீத4ராய நம:

திருமந்த்ரம்

ஓம் நமோ நாராயணாய

த்வயம்

ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்3யே।
ஸ்ரீமதே நாராயணாய நம:॥

ஸ்ரீ க்ருஷ்ண சரம ஶ்லோகம்

ஸர்வத4ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ।
அஹம் த்வா ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுச:॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

லகு₄ திருவாராத₄ந க்ரமம்

உஷ:காலத்தில் எழுந்திருந்து, நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்து, வாக்ய ஸ்லோககுருபரம்பரைகளை அநுஸந்தித்து, திருமந்த்ரம், த்வயம், சரமஸ்லோகத்தையும் அநுஸந்தித்து,

कूर्मादीन् दिव्यलोकान् तदनु मणिमयं मण्टपं तत्र शेषं
तस्मिन् धर्मादिपीठं तदुपरि कमलं चामरग्राहिणीश्च
विष्णुं देवीर्विभूषायुधगणमुरगं पादुके वैनतेयं
सेनेशं द्वारपालान् कुमुदमुखगणान् विष्णुभक्तान् प्रपद्ये ॥

கூர்மாதீ₃ந் தி₃வ்யலோகாந் தத₃நு
மணிமயம் மண்டபம் தத்ர ஶேஷம்
தஸ்மிந் த₄ர்மாதி₃பீட₂ம் தது₃பரி
கமலம் சாமரக்₃ராஹிணீஶ்ச
விஷ்ணும் தே₃வீர்விபூ₄ஷாயுத₄க₃ண -
முரக₃ம் பாது₃கே வைநதேயம்
ஸேநேஶம் த்₃வாரபாலாந் குமுத₃ -
முக₂க₃ணாந் விஷ்ணுப₄க்தாந் ப்ரபத்₃யே ||

என்று விண்ணப்பம் செய்து, முக்கால் கரதாட₃நம் செய்து,

"कौसल्यासुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते ।
उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम् ॥"

"கௌஸல்யாஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்₄யா ப்ரவர்த்ததே।
உத்திஷ்ட₂ நரஶார்த்தூ₃ல கர்த்தவ்யம் தை₃வமாஹ்நிகம் ॥"

என்னும் ஶ்லோகத்தாலே திருப்பள்ளியுணர்த்தி, திருக்காப்பு நீக்கி 'நாயகனாய்' என்னும் திருப்பாவைப் பாசுரத்தையும், திருப்பல்லாண்டு முதலிரண்டு பாசுரங்களையும் அநுஸந்தி₄த்து "ஆசார்யன் திருக்கையாலே திருவாராதனம் கண்டருள வேணும்" என்று பிரார்த்தித்துத் திருவாராதனம் தொடங்க வேண்டியது.

பெருமாள்	ஆசமனீயம் ஸ்நாநீயம் சுத்₃தோ₄த₃கம் பாத்₃யம் அர்க்₄யம்	படிக்கம் துளஸி முதலானவை

திருவாராதனம் செய்பவர்

துளசி, புஷ்பம், கந்தம் முதலியவற்றைத் தன் வலது பக்கத்தில வைத்துக்கொள்ளவேண்டியது.

1. ஸபர்யாஸநம்

"ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று உத்தர வாக்யத்தாலே உபகரணங்களை ப்ரோக்ஷிக்கவேண்டியது. 'ஸர்வ மங்க₃ள விக்₃ரஹவிஶிஷ்டாய ஸர்வ பரிவாரயுக்தாய ஸ்ரீமதே நாராயணாய நம:' என்று ஒரு திருத்துழாயைப் பெருமாள் திருவடிகளிலே ஸமர்ப்பித்து, "ஸபர்யாஸனம் கண்டருள வேணும்" என்று பிரார்த்திக்கவேண்டியது. "அர்க்₄யம் ஸமர்ப்பயாமி" என்று ஒரு தடவை உத்தரிணியாலே அர்க்₄ய பாத்ரத்திலிருந்து தீர்த்தம் எடுத்துப் பெருமாள் திருக்கைகளை விளக்கிப் படிக்கத்தில் சேர்த்து, மறுபடி "பாத்₃யம் ஸமர்ப்ப யாமி" என்று பாத்₃ய பாத்ரத்திலிருந்து இரண்டு உத்தரிணிகளாலே திருவடிகளை விளக்கிப் படிக்கத்தில் சேர்த்து, மறுபடி சுத்தோதகம் ஒரு தடவை ஸமர்ப்பித்து, மறுபடி அர்க்யம் ஒரு தடவை கொடுத்து, "ஆசமநீயம் ஸமர்ப்பயாமி" என்று ஆசமநீயபாத்ரத்திலிருந்து ஆசமனீயம் மூன்று தடவை

ஸமர்ப்பித்து மறுபடி சுத்தோதகம் ஒரு தடவை ஸமர்ப்பிக்க வேண்டியது; பெருமாள் திருப்பவளங்களுக்கும், திருக்கை திருவடிகளுக்கும் திருவொற்றுவாடை ஸமர்ப்பிக்கவேண்டியது. இதுதான் ஸபர்யாஸனம்.

2. ஸ்நாநாஸநம்

முன்போலவே "ஸர்வமங்கள விக்ரஹவிஶிஷ்டாய ஸர்வ பரிவாரயுக்தாய ஶ்ரீமதே நாராயணாய நம:" என்று ஒரு திருத்துழாயைப் பெருமாள் திருவடிகளில் ஸமர்ப்பித்து, "ஸ்நாநாஸனம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து, முன்போல் அர்க்ய பாத்ய (அர்க்ய) ஆசமநீயங்கள், சுத்தோதகம் திருவொற்றுவாடைகள் ஸமர்ப்பிக்கவேண்டியது, ஸாளக்ராமப்பெருமாளைப் படிக்கத்திற்குமேல் வடிதட்டில் எழுந்தருளப்பண்ணி, சந்தனக்காப்பு ஸமர்ப்பித்து, தீர்த்தத்தால் திருமஞ்சனம் செய்து திருவொற்றுவாடை ஸமர்ப்பித்து, சந்தனம், புஷ்பம் ஸமர்ப்பித்து ஆஸ்தானத்தில் எழுந்தருளப் பண்ணவேண்டியது. திருமஞ்சனம் செய்யும்போது புருஷஸூக்தமும், செய்தவுடன் "வெண்ணெயளைந்த குணுங்கு" ஒரு பாசுரமாவது ஸேவிக்கவேண்டியது. இது ஸ்நாநாஸனம்.

3. அலங்காராஸனம்

முன்போலவே "ஸர்வ மங்கள..." என்று தொடங்கி "அலங்காராஸனம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து, அர்க்ய பாத்ய (அர்க்ய) ஆசமனீய சுத்தோதக திருவொற்றுவாடைகள் ஸமர்ப்பிக்கவேண்டியது. புஷ்பம் முதலானவற்றால் பெருமாளை அலங்கரிக்கவேண்டியது. இது அலங்காராஸனம்.

4. மந்த்ராஸனம்

முன்போலவே தொடங்கி "மந்த்ராஸனம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து, அர்க்ய பாத்ய (அர்க்ய) ஆசமனீய சுத்தோதக திருவொற்றுவாடைகள் ஸமர்ப்பிக்க வேண்டியது.

மந்த்ர புஷ்பம்

இவ்விடத்தில் வேத வாக்யங்கள், ஶ்லோகங்கள், இயற்பா பாசுரங்கள் அநுஸந்திக்கவும்.

◆ ஹரி: ஓம்| அக்₃நிமீளே புரோஹிதம் யஜ்ஞஸ்ய தே₃வம் ருத்விஜம்| ஹோதாரம் ரத்னதா₄தமம்| ஹரி: ஓம்||

◆ ஹரி: ஓம்| இஷேத்வோர்ஜேத்வா வாயவஸ்தே₂ா பாயவஸ்த₂ தே₃வோ வஸ்ஸவிதா ப்ரார்ப்பயது ஶ்ரேஷ்ட₂தமாய கர்மணே| ஹரி: ஓம்||

◆ ஹரி: ஓம்| அக்₃ன ஆயாஹி வீதயே க்₃ருணாநோ ஹவ்ய தா₃தயே| நிஹோதா ஸத்ஸி ப₃ர்ஹிஷி| ஹரி: ஓம்||

◆ ஹரி: ஓம்| ஶந்நோ தே₃வீரபி₄ஷ்டய ஆபோப₄வந்து பீதயே| ஶம்யோரபி₄ஸ்ரவந்து ந:| ஹரி: ஓம்||

◆ ஹரி: ஓம்|| ஓமித்யக்₃ரே வ்யாஹரேத்| நம இதி பஶ்சாத் நாராயணாயேத்யுபரிஷ்டாத்| ஓமித்யேகாக்ஷரம்| நம இதி த்₃வே அக்ஷரே| நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி|| ஏதத்₃வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பத₃ம்| யோ ஹ வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பத₃மத்₄யேதி| அநபப்₃ருவஸ் ஸர்வமாயுரேதி| விந்த₃தே ப்ராஜாபத்யம் ராயஸ்போஷம் கௌ₃பத்யம்| ததோம்ருதத்வமஶ்நுதே ததோம்ருதத்வமஶ்நுத இதி| ய ஏவம் வேத₃-இத்யுபநிஷத்||

இச்சா₂மோ ஹி மஹாபா₃ஹும் ரகு₄வீரம் மஹாப₃லம்|
க₃ஜேந மஹதா யாந்தம் ராமம் ச₂த்ராவ்ருதாநநம்||
தம் த்₃ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகா₂வஹம்||
ப₃பூ₄வ ஹ்ருஷ்டா வைதே₃ஹீ ப₄ர்த்தாரம் பரிஷஸ்வஜே||

தாஸாமாவிரபூ₄த் ஶௌரி: ஸ்மயமாந முகா₂ம்பு₃ஜ:|
பீதாம்ப₃ரத₄ர: ஸ்ரக்₃வீ ஸாக்ஷாந் மந்மத₂ மந்மத₂:|
ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:|
நாக₃பர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாக₃தோ மது₂ராம் புரீம்||

◆ இவை வேத வாக்யங்கள். முதல் மூன்று வர்ணத்தவர்களே ஸேவிக்கலாம்.

வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்4ம் ஜக3த்பதி:|
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா ப4க்தைர் பா4க3வதைஸ் ஸஹ||

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் — என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

க3தா3 புனஶ் ஶங்க2ரதா2ங்க3 கல்பக
த்4வஜாரவிந்தா3ங்குஶ வஜ்ரலாஞ்ச2னம்
த்ரிவிக்ரம த்வச்சரணாம்பு3ஜத்3வயம்
மதீ3யமூர்த்4நா மலங்கரிஷ்யதி ||

ஶ்ரீமாத4வாங்க்4ரி ஜலஜத்3வய நித்யஸேவா
ப்ரேமாவிலாஶய பராங்குஶ பாத3ப4க்தம்
காமாதி3 தோ3ஷஹரமாத்மபதா3ஶ்ரிதாநாம்
ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்4நா ||

"ஓம் கேஶவாய நம:" என்று தொடங்கிப் பனிரண்டு திருநாமங்களுக்கு தளங்கள் ஸமர்ப்பிக்கவேண்டியது. தூ4பம் காண்பிக்கவேண்டியது. இதுவரை மந்த்ராஸனம்.

ஸ்தோத்ரரத்னத்திற்கும், யதிராஜவிம்ஶதிக்கும் நடுவில், ஸ்ரீபா4ஷ்யம் ஓர் அதி4கரணமும் (போ4க3மாத்ர ஸாம்யலிங்காச்ச), பஞ்சஸ்தவத்தில் ஓர் ஶ்லோகமும் சொல்லலாம்.

5. போ4ஜ்யாஸநம்

முன்போலவே தொடங்கி, 'போ4ஜ்யாஸநம் கண்டருள வேணும்" என்று பிரார்த்தித்து அர்க்4யபாத்3ய (அர்க்4ய) ஆசமநீய ஶுத்3தோ4தக திருவொற்றுவாடைகளை ஸமர்ப்பிக்க வேண்டியது.

திருவட்டவணையில் பிரஸாதத்தை வைத்து, ஒரு துளஸீ தளத்தை எடுத்து உத்தரவாக்யத்தாலே ப்ரோக்ஷித்து

"நாறு நறும் பொழில்" "அப்பங்கலந்த" என்னும் பாசுரங்களையும், கீழேயுள்ள மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளையும் அநுஸந்திக்கவேண்டியது.

"அஸத்யமயதா₃நீதம் அபராதை₄கபா₄ஜநம்|
அல்பஶக்திமஸைதர்யம் அநர்ஹம் ப்₄ருத்யகர்மணி||
தோ₃ஷாகாரம் து₃ராத்மாநம் மாமேவம் பரிசிந்தயந்|
மத்ஸமர்ப்பிதமித்யேதத் ந சோபேக்ஷிதுமர்ஹஸி||
கௌஸல்யாகல்பிதம் கே₃ஹே காநநே லக்ஷ்மணார்ப்பிதம்|
நவநீதம் க்₄ருதம் க்ஷீரம் வ்ரஜே யத் ஸ்வயமார்ஜிதம்||
யத்₃யத் நந்த₃யஶோதா₃ப்₄யாம் யத்₃யத்₃கோ₃பீபி₄ரர்ப்பிதம்|
யத₃ர்ப்பிதம் குசேலேந யத்₃யத்₃விது₃ரகல்பிதம்|
ஶ்ரியா தே₃வ்யா ச யத்₃ த₃த்தம் ஶட₂ாரிப்ரமுகை₂ஶ்ச யத்||
நாத₂ார்ய யாமுநாசார்ய யதீஶ்வர ஸமர்ப்பிதம்|
அந்யத்₃வா யத்₃யதி₃ஷ்டம் தே நித்யமுக்தைர் நிவேதி₃தம்||
த்வந்மஹிம்நோऽநுரூபஞ்ச த்வத்ப்ரியாணஞ்ச யத் ப்ரியம்|
தத₃ா தத₃ா ஸ்வஸங்கல்பாத் கல்பயித்வேத₃மேவ ஹி|
பத்₂யம் பாகவிஶேஷாட்₄யம் ருச்யம் தோ₃ஷவிவர்ஜிதம்|
ஸர்வோபசாரஸஹிதம் ஸம்ப்ரதி ப்ரேமபூர்வகம்||
அதஸ் த்வத்₃விஷயப்ரீதிப்ரேரித: கருணாகர|
அத்ரைவ ஸந்நித₄ாய த்வம் அகி₂லைஸ்ஸஹ போ₄க்த்ருபி₄:||
அநந்யார்ஹ ந த₃ய: ஸம்யக் ஆஸீந: பரமாஸநே|
ஸ்ரீமந் நாராயண ஸ்வாமிந் விலோகய மநோஹர||"

என்று மணவாள மாமுனிகள் ஸாதித்த ஶ்லோகங்களை அநுஸந்தித்து, தளிகையை மாற்றி வைத்துக்கொள்வது. கர்ப்பூரம் அல்லது தீ₃பஹாரத்தி பண்ணவேண்டியது. "சிற்றஞ்சிறு காலே" முதல் வாழித்திருநாமபர்யந்தம் அநுஸந்திக்க வேண்டும்

டியது. தீர்த்தவிநியோகம் (தனக்கு ஒரு தடவை) [தளிகை யை மாற்றிய வுடன் தாம்பூலம் ஸமர்ப்பிப்பது]

6. பர்யங்காஸநம்

முன்போலவே தொடங்கி. "பர்யங்காஸநம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து, அர்க்ய பாத்ய (அர்க்ய) ஆசமநீயசுத்தோதகங்க திருவொற்றுவாடைகள் ஸமர்ப்பித்து,

"உறகல் உறகல் உறகல் ஒண்சுடர் ஆழியே சங்கே
அறவெறி நாந்தகவாளே அழகிய சார்ங்கமே தண்டே
இறவுபடாமலிருந்த எண்மர் உலோகபாலீர்காள்
பறவையரையா உறகல் பள்ளியறை குறிக்கொண்மின்"

"அரவத்தமளியினோடும் அழகிய பாற்கடலோடும்
அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரை பல மோதப் பள்ளிகொள்கின்ற பிரானைப்
பரவுகின்றான் விட்டுசித்தன் பட்டிணம் காவற்பொருட்டே"

என்கிற பாசுரங்களை அநுஸந்தித்துத் திருக்காப்புச் சேர்த்து, வெளியில் வந்து தண்டம் ஸமர்ப்பித்து,

உபசாராபதேசேந க்ருதாந்ஹரஹர் மயா।
அபசாராநிமாந் ஸர்வாந் க்ஷமஸ்வ புருஷோத்தம॥

என்று அநுஸந்திக்கவேண்டியது.

ஆறு ஆஸனங்களுக்கும் துளசி சேர்த்தவுடனும் தீபாராதனையின் போதும் கோயிலில் மணி ஸேவிக்க வேண்டியது. கிருஹத்தில் மணியில்லை.